## 122. காலை தோறும் உம்

### பல்லவி

காலை தோறும் புது கிருபையால்
என்னை நிரப்பிடும்

### அனுபல்லவி

நான் நிற்பதும் நிர்முலமாகாததும்
உமது சுத்த கிருபையே

### சரணங்கள்

1. அனுதின உணவு தந்து
என்னை போஷித்து காத்திடும்
உமது கிருபையே
\- நான் நிற்பதும்

2. இந்த நாள் வரையிலும்
என் கரம் பிடித்து நடத்தியது
உமது கிருபையே
\- நான் நிற்பதும்

3. எல்லா ஆபத்திற்கும்
விலக்கி என்னை காத்தது
உமது கிருபையே
\- நான் நிற்பதும்

3. போக்கையும் வரத்தையும்
பத்திரமாக பாதுகாத்திடும்
உமது கிருபையே
\- நான் நிற்பதும்